ன் துணை.

வி ம் தாலூகா

ஸ்திரம்.

OF THE REGISTRAR OF
No.
3-MAR 1927

இஃது
விழுப்புரம், முனிஸி பல் ஹைஸ்கூல்
உபாத்தியாயர்
K. நாராயணசாமி ஐயர்,
இயற்றியது.

முதற் பதிப்பு

விழுப்புரம்
ஹனுமான் அச்சியந்திரசாலை.

1927.

[விலை அணா $2\frac{1}{2}$.

U.2114N
N27
121011

உ
ஷண்முகன் துணை.

விழுப்புரம் தாலூகா

பூகோள சாஸ்திரம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 - MAR 1927
MADRAS

இஃது
விழுப்புரம், முனிஸிபல் ஹைஸ்கூல் உபாத்தியாயர்
K. நாராயணசாமி ஐயர்,
இயற்றியது.

3620
915.4824
1662

முதற் பதிப்பு

விழுப்புரம்
ஹநுமான் அச்சியந்திரசாலை.

1927.

[Registered.] [விலை அணா 2½.

121011

PRINTED AT
THE HANUMAN PRINTING WORKS,
VILLUPURAM.

U. 2114V
No7

முகவுரை.

இக்காலத்தில் மாணவர்களின் புத்திக்கு ஏற்றவாறு புஸ்தகங்களைத் தாய்பாஷையில் எழுதுவது அருமை. இந் நூலாசிரியர் மகா-ா-ா-ஸ்ரீ K. நாராயணசாமி ஐயர் அவர்கள் இப்புஸ்தகத்தை ஆரம்பக்கல்வி கற்றுக்கொடுக்கும் வகுப்புக்கு ஏற்றவாறு, தயாரித்துப் பிரசுரிக்க முன்வந்தது மிகவும் பாராட்டத்தக்கது.

தெரிந்ததைக்கொண்டும், அருகிலுள்ளவைகளைக்கொண்டும், தெரியாதவைகளைத் தெரிந்துகொள்ளப் பிரயத்தனப்படுவதே முறை. மேலும் ஒரு பிரதேசத்தின் பூகோள சாஸ்திரம் அப்பிரதேசத்தின் சரித்திரத்தைச் சார்ந்தே அமையப்பெற்றிருக்கவேண்டும். இப்புஸ்தகம் வகுப்பையே ஆரம்பமாகக்கொண்டு, கிராமம், தாலூகா இவைகளைப் பற்றித் தொடர்ச்சியாகச் சொல்லிவருகிறது. ஆதலால், 'இக்காலத்திய போதனாமுறையை ஒட்டியே, இப்புஸ்தகம் இயற்றப்பெற்றிருக்கிறது,' என்பது படிப்போருக்கு நன்கு விளங்கும்.

இன்னும், வயது முதிர்ந்தவர்களில் அநேகருக்கு ஒரு தாலூகாவைப்பற்றிய விஷயங்கள் அநேகமாய்த் தெரியாது. இம்மாதிரியான புஸ்தகங்கள் நம் பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு உபயோகமாகவிருப்பதும் தவிர, பெரியவர்களுக்கும் பயனைத் தாக்கூடியது. அதிகாரிகள் அனைவரும் இந் நூலாசிரியரை ஆதரித்து, உற்சாகப் படுத்துவார்களென்று நம்புகிறேன்.

M. H. School, Villupuram. — V. JAYARAMA AYYAR, B.A., L. T., History Assistant.

சிறப்புப்பாயிர...

போதிப் பவர்க்கெளிதாம் புத்தியு...
கோதித் தெளிதற் குவப்புளதாம்—வேதத்தின்
நற்றமிழ்தேர் நாரா யணசாமி நன்குரைத்த
குற்றமில்பூ கோளக் குணம்.

Municipal High School, Villupuram. } R. NATESA AYYAR, Head Tamil Pandit.

உபாத்தியாயர்களுக்குக் குறிப்பு.



(1) வகுப்பின் மத்தியில் தரையின்மேல் திக்குகளைக் காட்டும் இந்த அடையாளக் கோடுகளைப் போட்டுத் திக்குகளை எழுதி வைக்கவேண்டும்.

(2) வகுப்பு, கிராமம், பிர்க்கா, முதலிய பாடங்களில் (*) நக்ஷத்திரப்புள்ளி வைத்திருக்கும் இடங்களில் பாடத்துக்குத் தக்கவாறு பதங்களை அமைத்துக்கொள்க.

(3) உங்கள் கிராமத்திற்குப் பொருத்தமில்லாத விஷயங்களை விட்டுவிடுக.

(4) கிராமப் பாடத்தில் சொல்லியிருக்கும் விஷயம் தவிர வேறு விஷயங்கள் இருப்பின் உபாத்தியாயர் எடுத்துக் கூறலாம்.

(5) இப்பாடம் போதிக்கும்போது, ஊரைச் சுற்றிப் பார்க்க, பிள்ளைகளை, ஒரு முறையாவது அழைத்துப்போய் விஷயங்களை நிதர்சன முறையில் போதிப்பது நலம்.

பூகோள சாஸ்திரம்.

நாம் வசிக்கும் இந்தப் பூமியின் இயற்கையமைப்பு முதலியவைகளைப்பற்றித் தெரிவிக்கும் புஸ்தகத்திற்குப் பூகோள சாஸ்திரம் என்று பெயர்.

முதலில் நம் வகுப்பின் அமைப்பைப்பற்றித் தெரிந்து கொண்டு மேலே செல்வோம்.

வகுப்பு.

வகுப்பின் எல்லைகள் :—

வடக்கே *

கிழக்கே *

தெற்கே *

மேற்கே *

நமது வகுப்பு நம் பள்ளிக்கூடத்தின் * பக்கத்திலிருக்கிறது. நமது வகுப்பு இருக்கும் அறையின் நீளம் * அடி, அகலம் * அடி.

இதிலுள்ள பிள்ளைகள் * பேர். அவர்களில் ஆண் * பேர், பெண் * பேர். இதில் இந்துக்கள் * பேர், மகம்மதியர்கள் * பேர், இந்திய கிருஸ்தவர்கள் * பேர், ஆதிதிராவிடர்கள் * பேர் இருக்கிறார்கள்.

இவர்களில் * பேர் தமிழும், * பேர் தெலுங்கும், * பேர் இந்துஸ்தானியும், பேசுகிறார்கள்.

இப்படியிருக்கும் இந்த வகுப்புக்கு அதிகாரி உபாத்தியாயர்; இந்தப் பள்ளிக்கூடத்திலிருக்கும் பல உபாத்தியாயர்களுக்கும் மேல் அதிகாரி தலைமை உபாத்தியாயர் (ஹெட் மாஸ்டர்); பல பள்ளிக்கூடங்களிலுமுள்ள உபாத்தியாயர்களுக்கு மேல் பார்வை அதிகாரி டிப்டி இனிஸ்பெக்டர்.

இவ்வகுப்பைப்பற்றியும் இதிலுள்ள நம்மைப்பற்றியும் சில விஷயங்கள் தெரிந்துகொண்டோம். அதைப்போலவே நாம் வசிக்கும் இந்தக் கிராமத்தைப்பற்றியும், கிராமத்திலுள்ளவரைப்பற்றியும் தெரிந்துகொள்ளுவோம்.

கிராமம்.

இந்தக் கிராமத்தில் நம்முடைய பள்ளிக்கூடம் * பக்கத்திலிருக்கிறது. இதன் எல்லைகளாவன:—

வடக்கே *
கிழக்கே *
தெற்கே *
மேற்கே *

இவைகளால் சூழப்பட்டிருக்கும் நமது கிராமத்திற்கு* என்று பெயர். இதன் விஸ்தீரணம்* ஏகர்கள்.

இதில் வீதிகளும், கல்வீடு, குச்சுவீடுகளும் இருக்கின்றன. சிவன் கோயில், பெருமாள் கோயில், பிள்ளையார் கோயில், மாரியம்மன் கோயில், திரௌபதியம்மன்கோயில், ஐயனர் கோயில்களும், மசூதி, மாதா கோயில்களும் உண்டு. இத்துடன் மடம், சத்திரம், கிராமச்சாவடியாகிய பொதுக் கட்டிடங்களும் இருக்கின்றன.

இதிலுள்ள மொத்த ஜனங்கள் * . இதில் ஆண்* பேர், பெண்* பேர்.

பிராமணர், வேளாளர், செட்டிமார், கவண்டர், (வன்னியர்) படையாட்சி, நாயுடு, முதலிய பல ஜாதியார் இங்கு வசிக்கிறார்கள். கொல்லத்துக்காரன், தச்சன், கருமான், தட்டான், கன்னான், குயவன், இடையன், கைக்கோளன், சேணியன், வர்ணியன், செம்படவன், வண்ணான், நாவிதன் முதலிய தொழிலாளர்களும், ஆதிதிராவிடர்களும் வசிக்கிறார்கள்.

இவர்களில் பெரும்பான்மையோர் பேசும் பாஷை தமிழ்; சிறுபான்மை தெலுங்கும் பேசுகிறார்கள்; மகம்மதியர் தங்களுக்குரிய இந்துஸ்தானியும், தமிழும் பேசுகிறார்கள்.

விவசாயமே இவர்களின் முக்கிய தொழிலாகும். சிலர் நாம் உண்ணக்கூடிய காய்கறி பதார்த்தங்களைப் பயிரிடுகிறார்கள். சிலர் மல்லிகை, முல்லை, ரோஜா முதலிய புஷ்பச் செடிகளையும், அநேகர் நெல், கரும்பு, வாழை முதலிய நன்செய்ப் பயிர்களையும், கம்பு, சோளம், கேழ்வாகு, மணிலாக்கோட்டை முதலிய புன்செய்ப் பயிர்களையும், பயிர் செய்கிறார்கள். அதற்கேற்றபடி ஏரி, குளம், ஊறல்வாய்க்கால், கிணறு, முதலிய ஜல வசதிகளும் இருக்கின்றன.

போக்கு வரவுக்காக ஒற்றையடிப்பாதைகளும், வண்டிகள் போகக்கூடிய ரஸ்தாக்களும் இருக்கின்றன.

இதற்கு அதிகாரி கிராம முன்சீப்பு. அவர் சர்க்கார் வரிவசூல் செய்வார்; சிறு வழக்குக்களையும் தீர்ப்பார். நிலங்களை அளந்துகட்டவும், சாகுபடி கணக்குகளைத் தயார்

செய்யவும், ஓர் கணக்குப்பிள்ளை இருக்கிறார். இவ்விருவருக்கும் உதவிசெய்ய ஓர் தலையாரியும், இரண்டு அல்லது மூன்று தோட்டிகளும், இருக்கிறார்கள். இந்த ஊரில் ஓர் தபால் ஆபீசும் இருக்கிறது.

இந்தக் கிராமம் * வட்டத்தைச் சேர்ந்தது * வட்டம் * பிர்க்காவைச் சேர்ந்தது.

பிர்க்கா.

ஒரு கிராமமோ, அல்லது பல கிராமங்கள் சேர்ந்தோ ஒரு வட்டம் ஆகும். பல வட்டங்கள் சேர்ந்தது ஒரு பிர்க்கா. பிர்க்காவின் அதிகாரிக்குக் கார்கோன் அல்லது ரேவின்யூ இனிஸ்பெக்டர் என்று பெயர்.

விழுப்புரம் தாலூகாவை ஏழு பிர்க்காக்களாகப் பிரித்திருக்கிறார்கள். அவைகளாவன:—

நம்பர்.	பிர்க்காவின் பெயர்.	வட்டங்கள்.	கிராமங்கள்.			மதுரா கிராமங்கள்
			ச.	சு.	ஜ	
1	விழுப்புரம்	25	39	1	....	3
2	காணை	28	40	2	1	2
3	அன்னியூர்	24	40	1	....	....
4	விக்கிரவாண்டி	24	38	2	....	1
5	வானூர்	33	41	1	....	....
6	கண்டமங்கலம்	32	40	....	1	2
7	வளவனூர்	28	41	....	....	18

வ

மே　　கி

தெ

விழுப்புரம் தாலூகா.

1.	விழுப்புரம்.	19.	வீடூர்.
2.	கோலியனூர்.	20.	திருவக்கரை.
3.	வளவனூர்.	21.	வானூர்.
4.	பள்ளிநேலியனூர்.	22.	பனையபுரம்.
5.	சின்னபாபுசமுத்திரம்	23.	வழுதாவூர்.
6.	வில்லியனூர்.	24.	முரட்டாண்டி சாவடி
7.	புதுச்சேரி.	25.	கோட்டைகுப்பம்.
8.	சேர்ந்தனூர்.	26.	அரியாங்குப்பம்.
9.	வெங்கடேசபுரம்.	27.	பாகூர்.
10.	மாம்பழப்பட்டு.	28.	மிட்டா மண்டகப் பட்டு.
11.	முண்டியம்பாக்கம்.		
12.	விக்கிரவாண்டி.	29.	மடுக்கரை.
13.	பேரணி.	30.	திருவாண்டார் கோவில்
14.	திருவாமாத்தூர்.		
15.	கஞ்சனூர்.	31.	பஞ்சமாதேவி.
16.	அன்னியூர்.	32.	சிறுவந்தாடு.
17.	பனமலை.	33.	பாக்கம்.
18.	மாத்தூர் திருக்கை.	34.	ஆனங்கூர்.

குறிப்பு.

- - - - பிரஞ்சு ராஜ்யம்.
-/-/-/-/ ரயில் பாதை.
——— கப்பி ரோட்டுகள்.
………… புதிதாய் போடும் ரயில் பாதை.
நம்பர்கள். கிராமங்கள் இருப்பிடத்தைக்குறிக்கும்



இவைகளில் ச=சர்க்கார் கிராமங்கள்	279
சு=சுரோத்திரிய இனும், கிராமம்	7
ஜ=ஜமீன் கிராமங்கள்	2
ஆக மொத்த கிராமங்கள்	288

விழுப்புரம் தாலூகா.

நாம் இதுவரையில், நமது வகுப்பு, கிராமம் இவைகளைப்பற்றிப் படித்தோம். இனிமேல், நமது கிராமம் இருக்கும் இந்த விழுப்புரம் தாலூகாவைப்பற்றிப் படிக்க ஆரம்பிப்போம்.

எல்லைகள்:—நமது தாலூகா படத்தைப் பார்த்தால் :—

வடக்கே—திண்டிவனம், செஞ்சி, தாலூகாக்கள்,
கிழக்கே—வங்காள விரிகுடா,
தெற்கே—கூடலூர்த் தாலூகா,
மேற்கே—திருக்கோயிலூர்த் தாலூகா,

எல்லைகளாக இருக்கின்றன. இதன் விஸ்தீரணம் 467 சதுர மைல்.

இயற்கையமைப்பு:—மலைகளும் குன்றுகளும் அதிகம் இல்லாததினுல் இது ஏறக்குறைய சமநிலமாயும், கிழக்கே போகப்போகப் பூமி சற்றுத் தாழ்வாயும் இருக்கிறது. ஆதலால் நதிகள் மேற்கிலிருந்து கிழக்கு முகமாய் ஓடுகின்றன. இதில் அநேக ஏரிகள் உண்டு.

மலைகள்.

இதில் மலைகள் இல்லை என்றே சொல்லலாம். ஆனல் செஞ்சி மலையின் தொடர்ச்சி, இந்தத் தாலூகாவின் வட

மேற்கு மூலையிலுள்ள சில கிராமங்களில், சிறு மலைகளாகக் காணப்படுகின்றன. அவைகளில் முக்கியமானது கருவாக்ஷி மலை, மற்றொன்று பனமலை.

வானூர் பிர்க்காவிலுள்ள திருவக்கரையில் பல குன்றுகள் இருக்கின்றன. இக்குன்றுகளின் கற்களை ஆலயத் திருப்பணிக்கு உபயோகிக்கிறார்கள். முக்கியமாய் ஆலயங் களுக்குச் சிலாவிக்ர ஹங்கள் செய்ய இக்குன்றின் கற்களே மேலானதாகக் கருதப்படுகின்றன.

நதிகள்,

பெண்ணையாறு :— இது மைசூர் ராஜ்யத்தில் உற்பத்தியாகிக் கிழக்கு முகமாய் ஓடி, நமது தாலூகாவுக்குத் தெற்கெல்லையாகச் சென்று, கூடலூருக்குச் சமீபத்தில் கடலில் விழுகிறது. இதைத் தக்ஷிண பிநாகினி என்றும் சொல்லுவார். பிரதி வருஷமும் தை மாதம், முதல் ஐந்து தேதி வரையில் இதில் கங்கை வருவதாகச் சொல்லுகிறார்கள். அப்போது இதன் கரையிலுள்ள தேவாலயங்களி லிருந்து ஸ்வாமிகளை ஆற்றுக்கு எடுத்துவந்து திருவிழாக் கொண்டாடுவார்கள். இதில் மழை காலத்தில் வெள்ளம் வரும்.

செஞ்சி ஆறு (சங்கராபரணி). இதை வராகநதி என்றும் சொல்வார்கள். இது செஞ்சித் தாலூகாவில், மலையனூருக்கருகிலுள்ள ஓர் ஏரியில் உற்பத்தியாகி, இந்தத் தாலூகாவில் தெற்கு முகமாய் ஓடி, மதுரப்பாக்கம், திருவக்கரைக்கு அருகில் தென் கிழக்காய்த் திரும்பிப், புதுவைக்கு அருகில் இரண்டுகிளைகளாகப் பிரிந்து கடலில் கலக்கிறது. வடகிளைக்கு அரியாங்குப்பத்து ஆறு என்றும்,

தென் கிழக்குச் சுண்ணும்பு ஆறு அல்லது கிளிஞ்சல் ஆறு என்றும் பெயர். வில்லியனூருக்கருகில் புதுவைக்குப்போகும் தென் இந்தியா இருப்புப்பாதையில் குறுக்கிடுகிறது, அங்கு இதற்கு வில்லியனூர் ஆறு என்று பெயர். மழை காலத்தில் மட்டும் சில நாளைக்கு இதில் வெள்ளம் வரும்.

பம்பையாறு:—இது திருக்கோவிலூருக்கருகில் பெண்ணையாற்றிலிருந்து பிரிகிறது. திருவாமாத்தூர், ஐயன்கோவில்பட்டு வழியாய்ச்சென்று வராக நதியில் கலக்கிறது. இதன் நீளம் சுமார் 11 மைல். ஐயன் கோவில்பட்டிலும் வாதானூரிலும் இதற்கு அணைக்கட்டுகள் உண்டு. இவைகளிலிருந்து பல ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டுபோகிறார்கள்.

விக்கிரவாண்டியாறு :—செஞ்சித் தாலூகாவின் தென் கிழக்கிலுள்ள ஓர் ஏரியில் உற்பத்தியாகி இந்தத் தாலூகாவில் தெற்குமுகமாய் ஓடிப் பிறகு கிழக்குமுகமாய்த் திரும்பி ராதாபுரத்துக்கருகில் வராக நதியில் கலக்கிறது.

ஏரிகள்.

ஏரிகள் இங்கு அதிகம். பெரும்பாலும் ஆற்றுநீரால் நிரம்பக்கூடியவைகளே. அன்னியூர் பிர்க்காவிலுள்ள ஏரிகள் மட்டும் மழை ஜலத்தினால் நிறம்புகின்றன. இந்தத் தாலூகாவில் முக்கியமாய் மூன்று ஏரிகள் உண்டு. 1. ஆனாங்கூர் ஏரி, 2. பாக்கம் ஏரி, 3. வளவனூர் ஏரி இவைகளின் ஜலம் முறையே சுமார் 1300, 1500, 2000 ஏக்கர் நிலங்களுக்குப் பாய்கிறது. இம் மூன்றுக்கும் பெண்ணையாற்றிலிருந்து தண்ணீர்வரக் கால்வாய்கள் இருக்கின்றன.

சீதோஷ்ண ஸ்திதி.

கோடைகாலத்தில் வெயில் அதிகமாயும் மாரிகாலத்தில் சற்று குளிர்ச்சியாயும் இருக்கும். கிழக்கிலுள்ள கடலிலிருந்து ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் மழைக் காற்று வீசுகிறது, அப்பொழுது மழை அதிகம் பெய்யும். கடலோரத்திலிருப்பதால் மேற்கிலுள்ள மற்ற தாலூக்காக்களைவிட இங்கு மழை அதிகம் பெய்தபோதிலும் இங்குச் சாகுபடிக்கு வேண்டிய அளவு பெய்கிறதில்லை.

நிலவளம்.

இதில் செம்மண் பூமி அதிகம். கடலோரத்திலும் பெண்ணையாற்றின் ஓரத்திலுமுள்ள நிலம் மணற்பாங்காயிருக்கும். பொதுவில் இங்கு நன்செய் நிலம் அதிகம்.

காடுகள்.

கடயம்; விக்கிரவாண்டி; நல்லாப்பாளையம் ஒடயானத்தம்; திருவக்கரை, நெமிலி, சிறுவாக்கூர் முதலிய கிராமங்களில் காடுகளுண்டு இவை பாரஸ்டு பஞ்சாயத்தார் மேற்பார்வையி லிருக்கின்றன.

நீர்ப்பாசனம்.

ஏரிகளும், கிணறுகளுமேதான் இங்குள்ள நிலங்களுக்கு நீர் ஆதாரம். இதைத்தவிர இந்தத் தாலூகாவில் மட்டும் ஊற்றுக்கால் பாய்ச்சலும் உண்டு. அதாவது ஊற்றுள்ள இடங்களில் குளங்களாக வெட்டித் தண்ணீரை வாய்க்கால் மூலமாய்க் கொண்டுபோய் வயல்களுக்குப் பாய்ச்சுகிறார்கள். அவைகளில் முக்கியமானவை.

(1) விழுப்புரத்திற்கு மேற்கில் 4-மைல் தூரத்திலுள்ள

ஒருகோடி என்னும்ஊரில் உற்பத்தியாகி வழுதரெட்டிவரை யில் வந்து பாய்கிறது. (2) சேர்ந்தனூருக் கருகிலுள்ள பில்லூரிலிருக்கிறது. (3) சின்னபாபுசமுத்திரத்தி லிருக்கிறது. இதைப்போலவே வளவனூரிலும், கோலியனூரிலும், விழுப்புரத்திலுமிருக்கின்றன. இவ்வூற்றுக் கால்கள் குறைந்தது 100 ஏகர் முதல் 500 ஏகர் வரையில் பாய்கின்றன.

விளைபொருள்.

மணிலாக்கொட்டை விசேஷமாய்ப் பயிராகிறது.

நன்செயில் நெல், கரும்பு, வாழைகளும், புன்செயில் கம்பு, கேழ்வரகு, சோளம், எள்ளு, அவுரி, வரகு முதலியவைகளும், பயிராகின்றன.

கைத்தொழில்.

மணிலாப்பயற்றைச் செக்கிலிட்டுஆட்டி எண்ணெயும் பிண்ணாக்கும் எடுப்பதே முக்கிய கைத்தொழில். நீலம் காய்ச்சுதல், பித்தளைச்சாமான் செய்தலும் உண்டு. 'திருவந்தாட்டில் பட்டுநூல் நெசவும், மடுக்கரை, சங்கீதமங்கலம், கருவாக்ஷியில் பருத்திநூல்நெசவும், வளவனூரில் பொம்மைகள் செய்தலும், கொடுக்கூர், மதுகடிப்பட்டு, பனங்குப்பத்தில் கோரைப்பாய் முடைதலும், ஆகிய கைத்தொழில்களும் இங்கு நடக்கின்றன.

வியாபாரம்.

ஏற்றுமதி:— மணிலாப்பயறு, எண்ணெய், பிண்ணாக்கு, பருத்தி, பட்டுப்புடவைகள், நூல் வஸ்திரங்கள், மண் பாண்டங்கள், தோல் முதலியவைகள் ஏற்றுமதி யாகின்றன.

இறக்குமதி:—சீமைத்துணிகள், சாராயம், மண்ணெண்ணெய், வத்திப்பெட்டி, இரும்புச்சாமான்கள், காகிதம், கண்ணாடி முதலிய அயல்நாட்டுச் சரக்குகளும், பாக்கு மிளகு, தேக்குமரம், பனவாரை, பனம்பட்டை முதலிய உள்நாட்டுச் சரக்குகளும் இறக்குமதியாகின்றன.

இவ்வியாபாரம் தரை மூலமாயும், ரயில் மூலமாயும் கடல் மூலமாயும் நடத்தப்பட்டு வருகிறது. மாம்பழப்பட்டு, கிடார், முட்டத்தூர், ராதாபுரம், மதகடிப்பட்டு, பஞ்சமாதேவி, கோலியனூர், அரியலூர், அத்தியூர், எலிஸ்சத்திரம் முதலிய இடங்களில் ஒவ்வொரு வாரமும்கூடும் சந்தையில் அதிகவியாபாரம் நடக்கிறது.

போக்குவரவு சாதனங்கள்.

சாலைகள், இருப்புப்பாதைகள் ஆகிய இரண்டுவித மார்க்கங்கள்தான் இங்கு உண்டு.

சாலைகள்:— சென்னையிலிருந்து திருச்சிராப்பள்ளிக்குப் போகும் ரஸ்தாவானது பேரணி விக்கிரவாண்டி, விழுப்புரம் இவ்வூர்களின் வழியாய் போகிறது. பார்ப்பனப்பட்டு, பனையபுரத்துக்கருகில் இதிலிருந்து இரண்டு கிளைச்சாலைகள் பிரிகின்றன. ஒன்று நேர் கிழக்காய்ப் பனையபுரம், மதுராப்பாக்கம், வழுதாவூர், வில்லியனூர், உழுவர்கரை (ஓழுகரை)யின் வழியாகப் புதுச்சேரிக்கும், மற்றொன்று தெற்குமுகமாய்ப் வேங்கடாத்திரி அகரம், பஞ்சமாதேவி வழியாய்ப்பண்ருட்டிக்கும்போகிறது. மாம்பழப்பட்டிலிருந்து வேங்கடேசபுரம், விழுப்புரம், வளவனூர், கண்டமங்கலம், வில்லியனூர் வழியாய்ப் புதுச்சேரிக்குப்

N27

போகும் கப்பிரோட்டு திருச்சிராப்பள்ளிப் பாதையை விழுப்புரத்திலும், பண்ருட்டிப்பாதையைக் கோலியனூருக்குக் கிழக்கிலும் சந்திக்கிறது. இவைகளுடன் விழுப்புரத்திலிருந்து செஞ்சிக்கும் புதுவையிலிருந்து திண்டிவனத்திற்கும், கூடலூருக்கும் பல சாலைகள் போகின்றன. அவைகளில் மோட்டார்வண்டிகள் வாடகைக்கு விடுகிறார்கள்.

இருப்புப்பாதைகள்:—தென் இந்தியா இருப்புப்பாதையில் விழுப்புரம் ஓர் பெரியஜங்ஷன். சென்னையிலிருந்து தனுஷ்கோடிக்கும், காட்பாடியிலிருந்து புதுச்சேரிக்கும் போகிற இருப்புப்பாதைகள் இங்குச்சந்திக்கின்றன. இப்பொழுது இங்கிருந்து விருத்தாசலம் மார்க்கமாய்த் திருச்சிராப்பள்ளிக்கு ஓர் இருப்புப்பாதை போடப்பட்டு வருகிறது. படத்தில் அதைக் கவனித்துப்பார்க்க.

ஜனத்தொகை.

1921ஆம் வருஷம் எடுத்த ஜனசங்கியையக் (சென்ஸஸ்) கணக்குப்படி இந்தத்தாலூகாவில் ஆண் 165399 பேர்,
பெண் 165378 பேர்,

ஆகமொத்தம் 330777 ஜனங்கள்

வசிக்கிறார்கள். இதுஓர் ஜனநெருக்கமுள்ள தாலூகா. ஒரு சதுரமைலுக்கு 708 ஜனங்கள் வீதம் வசிக்கிறார்கள். அவர்களில் 1000-க்கு 940-பேர் ஹிந்துக்கள், 25-பேர் மகம்மதியர், 30-பேர் கிருஸ்தவர், 5-பேர் ஜைனர்கள்.

மதம்:— இதில் பெரும்பாலோர் ஹிந்துக்கள். சிறுபான்மை, மகம்மதியரும், கிருஸ்தவரும், சொற்ப ஜைனரும் உண்டு.

121011

பாஷை :— இங்குப் பெரும்பான்மையோர் தமிழும், சிறுபான்மை தெலுங்கும், மகம்மதியரில் சிலர் ஹிந்துஸ்தானியும், பேசுகிறார்கள். இதில் இங்கிலீஷ் பாஷை தெரிந்தவர்கள் சுமார் 2215 பேர் இருக்கிறார்கள்.

அரசாக்ஷி.

இந்தத் தாலூக்காவுக்கு ரெவின்யூ அதிகாரி தாசில்தார்; அவருக்கு மேல் அதிகாரியான சப் கலெக்டர் திண்டிவனத்திலும், ஜில்லா கலெக்டர் மஞ்சக்குப்பத்திலும் இருக்கிறார். சப் மாஜிஸ்டிரேட்டும், ஜில்லா முன்சீப்பும் விழுப்புரத்திலேயே இருக்கிறார்கள்.

ஊர்க் காவலுக்காக விழுப்புரம், வளவனூர், வானூர், விக்கிரவாண்டி, கஞ்சனூர் முதலிய இடங்களில் போலீஸ் ஸ்டேஷன்களும் கண்டமங்கலத்தில் ஓர் அவுட்போஸ்டும் இருக்கின்றன. இவை விழுப்புரம் சர்க்கிள் இனிஸ்பெக்டரின் பார்வைக்குட்பட்டவை.

பயிரிடுவோர், தொழிலாளர், முதலியவர்களுக்குக் கிராமந்தோறும் ஐக்கிய நாணயச்சங்கங்கள் வைத்துச் செலவில்லாமல் நபர் ஜாமீன்பேரிலும், சொத்து ஜாமீன் பேரிலும் கடன் கொடுத்துக் கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பி வாங்கிக்கொள்ளுகிறார்கள்.

கிராமத்தில் பயிர்த்தொழில் விருத்தியடையச் செய்வதற்காகச் சர்க்கார் உத்தியோகஸ்தர் (அக்ரிகல்சரல் டிமான்ஸ்ட்ரேட்டர்) ஒருவர் விழுப்புரத்திலிருக்கிறார். அவரிடத்திலிருந்து உயர்ந்த விதை, எருவு, கலப்பை வாங்கிக்கொள்ளலாம்.

ஸ்தல சுயஆக்ஷி.

கிராமங்களின் முன்னேற்றத்திற்காகச் சர்க்காரார் நமக்கும் சில விஷயங்களில் சுய ஆக்ஷி கொடுத்திருக்கிறார்கள். அவை

(1) பாதைகள் மாராமத்துச் செய்தல்,

(2) பிள்ளைகளுக்கு ஆரம்பக்கல்விக்காகப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தல்.

(3) நோயாளிகளுக்கு வைத்தியசாலை வைத்தல்,

(4) குடிதண்ணீருக்குக் கிணறுகள் வெட்டிவைத்தல் முதலியன.

இவைகளைஎல்லாம் ஓர்சபையார் பார்த்துக்கொண்டு வருகிறார்கள். அந்தச் சுயஆக்ஷி சபைக்குத் தாலூகா போர்டு என்று பெயர். விழுப்புரம், திண்டிவனம் தாலூகா போர்டைச் சேர்ந்தது. அச்சபையின் பிரசிடேண்டு இந்தத் தாலூகாவைச்சேர்ந்த மேற்சொல்லிய வேலைகளைப்பார்த்து வருகிறார். இந்தத் தாலூகாபோர்டின் கீழ், கிராமங்களில், யூனியன் போர்டும், கிராம பஞ்சாயத்தும் இருக்கின்றன. வளவனூரில் ஓர் யூனியன் போர்டும், விக்கிரவாண்டி, வீடூர், சாத்தனூர் முதலிய கிராமங்களில் கிராமபஞ்சாயத்தும் இருக்கின்றன.

தாலூகாபோர்டு, யூனியன் போர்டு, கிராம பஞ்சாயத்து ஒவ்வொன்றும் ஓர் சபை. அந்தச்சபையின் நபர்களை நிலவரி கொடுக்கும் குடிகளே தேர்ந்தெடுக்கிறார்கள்.

இருப்புப்பாதை.

சென்னையிலிருந்து தனுஷ்கோடிக்குப்போகும் பாதையில் விழுப்பரம் தாலூகாவிலுள்ள ஸ்டேஷன்கள்:—

1. பேரணி.
2. விக்கிரவாண்டி.
3. முண்டியம்பாக்கம்.
4. விழுப்புரம்.
5. சேர்ந்தனூர்.

காட்பாடியிலிருந்து புதுச்சேரிக்குப் போகும் பாதையில் விழுப்புரம் தாலூகாவில் இங்கிலீஷ்காரர் எல்லையிலுள்ள ஸ்டேஷன்கள்

1. மாம்பழப்பட்டு.
2. வேங்கடேசபுரம்.
3. விழுப்புரம்.
4. கோலியனூர்.
5. வளவனூர்.
6. பள்ளிநேலியனூர்.
7. சின்னபாபுசமுத்திரம்.

ஷை பாதையில் பிரஞ்சுலாகாவிலுள்ள ஸ்டேஷன்கள்.

1. வில்லியனூர்.
2. புதுச்சேரி.

முக்கிய கிராமங்கள்.

விழுப்புரம்:—இது இந்தத் தாலூகாவின் முக்கியபட்டணமாயும், ஓர்முனிசிபல்டவுனாகவுமிருக்கிறது. ஜனத்தொகை 17423. இங்குத் தாலூகாஆபீசும், முன்சீப்கோர்ட்டும், சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டும், பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்டுமெண்ட் ஆபீசும், ஜில்லா ரிஜிஸ்டிரார் ஆபீசும், போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆபீசும் இருக்கின்றன. கல்வி விருத்திக்காக ஓர் ஹைஸ்கூலும், பெண்பாடசாலைகளும், ஓர் போதனுமுறைப் பாடசாலையும் இங்கு உண்டு. முனிசி

பல் ஆஸ்பத்திரியும், பிரயாணிகள் தங்கச் சத்திரங்களும் முசாபரி பங்களாவும் இருக்கின்றன.

முன் திண்டிவனம் சப் கலெக்டராயிருந்த "மிஸ்டர் டேட் துரை" தன்காலத்தில், இந்தவூரில் ஓர் உத்தியானவனம் ஏற்படுத்தியிருக்கிறார். இவ்வூரில் அகப்பட்ட ஜைன விக்கிரஹங்கள் இதில் வைக்கப்பட்டிருக்கின்றன.

ஓர் சிவன்கோவிலும் ஓர்பெருமாள்கோவிலும் உண்டு. சிவன்கோவில் சுவரில் சில கல்வெட்டுகள் காணப்படுகின்றன. சிவன்கோவிலுக்கருகிலுள்ள நந்தவனத்தில் பழைய காலத்திய மண்கோட்டையின் சின்னங்கள் இருக்கிறதாகத் தெரிகிறது.

ஐக்கிய நாணயச் சங்கத்தின் சூபர்வைஸிங் யூனியன் ஆபீஸ் ஒன்று இருக்கிறது. இங்கு ஓர் அர்பன் பாங்கும், பல ஐக்கிய நாணயச்சங்கங்களும் ஐக்கிய பண்டகசாலையும் உண்டு. அடிக்கடி சங்கங்களின் நன்மையை உத்தேசித்துப் பொதுக்கூட்டம் கூடுவதுமுண்டு.

இது ஓர் நல்ல வியாபார ஸ்தலம்; மணிலாக்கொட்டை வியாபாரம் அதிகம்.

வளவனூர்:—இது விழுப்புரத்துக்குக்கிழக்கே 6மைல் தூரத்திலிருக்கிறது. ஓர் யூனியன் ஆபீசும், சப் ரிஜிஸ்டரார் ஆபீசும், ஆஸ்பத்திரியும், தபால் தந்தி ஆபீசும், போலீஸ் ஸ்டேஷனும், ரயில்வே ஸ்டேஷனும் இருக்கின்றன. 1358 வீடுகளும் உண்டு; 7697 ஜனங்கள் வசிக்கிறார்கள். மணிலா வியாபாரத்திற்குப் பெயர் பெற்றது. இங்கிருந்து எண்ணெய், பிண்ணாக்கு முதலியவைகளை அயல் நாடுகளுக்குஏற்றுமதிசெய்கிறார்கள் இங்கு ஐக்கியநாணயச்

சங்கத்தின் சூபர்வைசிங் யூனியன் ஆபீஸ் ஒன்றும் பல நாணயச் சங்கங்களும் உள.

கண்டமங்கலம்:—இது பிரெஞ்சு ராஜ்யத்தின் அருகி லிருக்கிறது. இதில் ஓர் போலீஸ் அவுட்போஸ்டும், ரயில்வேஸ்டேஷனும் இருக்கின்றன. புதுவையிலிருந்து வரும் ஜனங்களைப் பரிசோதித்துத் தீர்வை விதிக்கும் சாவடியொன்று இருக்கிறது. இதன் ஜனத்தொகை 773.

கோலியனூர்:— இது விழுப்புரத்திற்குக் கிழக்கே 4 மைல் தூரத்திலிருக்கிறது. இதிலிருக்கும் சிவன்கோயி லில் சில கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. பிரசித்தி பெற்ற மாரியம்மன் கோயிலும் ஒன்று உண்டு இங்கு நடந்த செடல் திருவிழாவானது 1860ஆம் வருஷத்தில் சர்க்காரால் நிறுத்தப்பட்டதென்று தெரிகிறது. இதில் 3046 ஜனங்கள் இருக்கிறார்கள்.

பனையபுரம்:—(பறவைபுரம்) இது விழுப்புரத்திற்கு வடக்கிழக்கில் 6 மைல் தூரத்திலிருக்கும் ஓர் சிவஸ்தலம். ஸ்ரீ ஞானசம்பந்தரால் பாடப்பெற்றது. அவர் பாடலி லிருந்து இது "பனங்காட்டூர்" என்று தெரியவருகிறது. அந்த ஆலய கோபுரவாசலிலிருக்கும் கல்வெட்டினால் அங் குள்ள லிங்கம் ஓர் பனைமரத்தடியி லிருந்ததாகத் தெரிகி றது. சித்திரைமாதம் முதல் 7 நாள் வரையில் சூரியனு டைய கிரணங்கள் முதலில் லிங்கத்தின் பேரிலும், பிறகு அம்மன்பேரிலும், வீழ்கின்றன. அப்போது சோடசோப சார தீபாராதனை நடக்கும். இதைச் சூரியபகவான் தானே பூஜை செய்வதாகச் சொல்வார்கள். இதன் ஜனத் தொகை 1372.

திருவக்கரை:—இது புதுவைக்கு வடமேற்கில் 13-மைல் தூரத்தில், வராகநதிக்கரையிலிருக்கும் ஓர் சிவஸ்தலம். இதுவும் ஸ்ரீஞான சம்பந்தரால் பாடப்பெற்றிருக்கிறது. இதிலிருக்கும் லிங்கத்திற்கு, யுகத்திற்கு ஓர்முகமாக 4-முகங்கள் உண்டு. இதில் சிலாரூபத்தையடைந்த அநேக மரக்கற்கள் (பாஸில் ஸ்டோன்ஸ்) இருக்கின்றன. இதைக் கெம்புகள் (சிகப்புக்கற்கள்) சாணைபிடிக்க விசேஷமாய் உபயோகிக்கிறார்கள். சிக்கிமுக்கிக் கல்லும் அகப்படுகிறது. இந்தச் சிவாலயத்திலிருக்கும் கல்வெட்டுக்களிலிருந்து இது சோழராஜ பரம்பரையில் ஓர் இராணியால் 19-ஆவது நூற்றாண்டில் கட்டப்பட்டதாகத்தெரிகிறது. சுவாமி சந்நிதியில் ஆறு அடி உயரமுள்ள ஓர் நந்தியும் இருக்கிறது. இந்த ஜில்லாவில் இவ்வளவு பெரியநந்தி எங்குமில்லை. இங்கு1781-ஆம்வருஷம் ஐதராலியால் நாசப்படுத்தப்பட்ட சில பிம்பங்கள் கிடக்கின்றன. இது முற்காலத்தில் ஓர் பெரிய பட்டணமாயிருந்ததென்பதற்கு, இதன் வீதிகளும், சிவாலயத்தினமைப்புமே, சாக்ஷி. இதன் ஜனத்தொகை 919.

திருவாமாத்தூர்:-இது விழுப்புரத்திற்கு வடமேற்கில் 3-மைல் தூரத்தில், பம்பையாற்றின் கரையிலுள்ள ஓர் சிவஸ்தலம். இது மூவராலும் பாடப்பெற்றது. இவ்வாலயத்தில் சோழராஜர் காலத்தில் எழுதிய சில கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. பங்குனிமாதம் உத்திரத்தன்று இங்கு ரதோற்சவம் நடைபெறும். இதிலிருக்கும் முத்தாம்பிகை அம்மன் மிகவும் சக்தியுள்ளதென்று கூறப்படுகிறது. இதன் ஜனத்தொகை 1624.

பனமலை (பனைமலை) விழுப்புரத்திற்கு வடக்கில் 13-மைல் தூரத்திலிருக்கிறது. இதிலுள்ள ஏரியின் நடுவில்

ஓர் குன்றும், அக் குன்றின்மேல் ஓர் சிவன் கோயிலுமிருக்கிறது. அதிலிருக்கும் கல் வெட்டுக்களால் இது 17-ஆவது நூற்றூண்டில் பல்லவராஜனுகிய ராஜஸிம்ஹரினுல் கட்டப்பட்டதென்று தெரிகிறது. ஜனத்தொகை 2270.

வழுதாவூர்:—புதுச்சேரிக்கு வடமேற்கில் 10-மைல் தூரத்திலிருக்கிறது. இது தேசிங்குராஜாவினுடைய நண்பனுகிய மகமத்கானென்னும் ஓர் சிற்றரசனுடையபட்டணம். இங்குப் பழயகோட்டைகளின் சின்னங்களை இப்போதும் காணலாம். 1750-ஆவது வருஷத்தில் இங்கு ஓர் சண்டை நடந்தது. இங்கு மகம்மதியர் அதிகம். இங்குள்ள மருதி மிகவும் பிரசித்திபெற்றது. இங்கிலீஷ்காரருடைய தீர்வைச்சாவடி ஒன்றும் உண்டு. ஜனத்தொகை 2140.

வானூர்:-புதுவைக்கு வடமேற்கில் 10-மைல் தூரத்திலிருக்கிறது. இதில் டிப்டி தாசில்தார் ஆபீஸ், சப் மாஜிஸ்டிரேட் ஆபீஸ், போலீஸ் ஸ்டேஷன், சப்ரிஜிஸ்டரார் ஆபீஸ், முசாபர் பங்களா முதலியவை இருக்கின்றன. இதுவும் சரித்திர சம்பந்தமான ஓர் ஊர். ஜனத்தொகை 2129.

விக்கிரவாண்டி:—விழுப்புரத்திற்கு வடக்கே 8-மைல் தூரத்திலிருக்கிறது. இதில் சப் ரிஜிஸ்டரார் ஆபீசும், போலீஸ் ஸ்டேஷனும், ரயில்வே ஸ்டேஷனும், முசாபர் பங்களாவுமிருக்கின்றன. இங்கு 1752-ஆவது வருஷத்தில் ஓர் சண்டை நடந்ததாகவும் தெரிகிறது. ஜன. 3316.

மாத்தூர்த் திருக்கை:— இது விழுப்புரத்திற்கு வடமேற்கில் 13-மைல் தூரத்திலிருக்கிறது. இந்தக் கிராமத்திற்கு வடமேற்கில் 4-மைலுக்கப்பால் ஓர் குன்று இருக்கிறது. அக் குன்றிலுள்ள குகையைத்தடுத்து ஓர் கோயில்

கட்டப்பட்டிருக்கிறது. இதற்கு மேற்கில் பாண்டவர்கள் படுத்திருந்ததாகச் சொல்லப்படும் ஐந்து கருங்கற் பாறைகள் இருக்கின்றன. ஜனத்தொகை 1773.

வீடூர்:—இது விக்கிரவாண்டிக்கு வடகிழக்கில் 4-மைல் தூரத்தில் வராகநதிக்கரையில் இருக்கிறது. இங்கு ஜைநர் அதிகம். அவர்களுடைய கோயிலும் ஒன்று உண்டு. ஜனத்தொகை 3001.

மண்டகப்பட்டு:—இது விழுப்புரத்திலிருந்து செஞ்சிக்குப்போகும் ரஸ்தாவிலிருக்கிறது. இதில் ஒரே கல்லில் குடைந்துள்ள 19-அடி நீளமும் 15-அடி அகலமுமுள்ள 4-தூண்களால் தாங்கப்பட்ட மண்டபம் ஒன்று இருக்கிறது.

அன்னியூர்:—இது ஓர் பிர்காவின் தலைகிராமம். இதில் ஓர் சப்ரிஜிஸ்டரார் ஆபீசும், தபால் ஆபீசும் இருக்கிறது.

கஞ்சனூர்:— இது செஞ்சிக்குப்போகும் ரோட்டிற்குத் தெற்கிலிருக்கும் ஓர்செட்டிமார் கிராமம். இங்குப் பெருமாள்கோயில் ஒன்று உண்டு. இப்போது இதில் ஓர் போலீஸ் ஸ்டேஷனேற்பட்டிருக்கிறது. ஜனத்தொகை 1289.

சிறுவந்தாடு:— வளவனூருக்குத் தெற்கே 4-மைல் தூரத்திலிருக்கிறது. இங்கு செட்டிமார்கள் அதிகம். இதிலும் இதையடுத்த மோக்ஷகுளம் என்னும் ஊரிலும் பட்டுப் புடவைகள் நெய்யும் சாலியர்களின் தறிகள் பல உண்டு. விலையுயர்ந்த பட்டுப்புடவைகள் நெய்து வெளியூர்களுக்கு அனுப்புகிறார்கள். ஜனத்தொகை. 1176+1213.

காகுப்பம்:— விழுப்புரத்திற்கு வடகிழக்கில் சுமார் 2-மைல் தூரத்திலுள்ள ஓர் சுரோத்திரிய கிராமம். இதிலிருக்கும் ஐயனார்கோவில் மிகவும் பிரசித்திபெற்றது.

மிட்டா மண்டகப்பட்டு :—கண்டமங்கலத்திற்குத் தென் மேற்கில் சுமார் 4-மைல் தூரத்தில் இருக்கிறது. இது ஓர் ஜமீன் கிராமம். பெரும்பாலார் செட்டிமார். இதில் ஓர் சிவன்கோயில் இருக்கிறது. அதிலுள்ள மீனுக்ஷிஅம்மன் மிகவும் சக்தியுள்ளது. சித்திரை மாதத்தில் இங்குப் பிர் மோற்சவம் நடக்கும். இதின் கிழக்கில் கூடலூரிலிருந்து வரும் ரோட்டில் ஓர் தீர்வைச்சாவடி யிருக்கிறது. கிழக்கில் $1\frac{1}{2}$-மைல் தூரத்தில் சிவப்ரகாசஸ்வாமிகள் அடங்கிய நல்லாத்தூர்(நல்லாற்றூர்)இருக்கிறது. ஜனத்தொகை 2221.

திருவாண்டார் கோவில் :— இது கண்டமங்கலத்தி லிருந்து மேற்கே 2-மைல் தூரத்திலிருக்கிறது. இது தேவா ரத்தில் வடுகூர் என்று சொல்லப்படும். திருஞான சம்பந்த மூர்த்தி நாயனுரால் பாடப்பெற்றது. சுவாமியின்பெயர் வடுகூர்நாதர்; தேவிபெயர் வடுவகிர்க்கண்ணி.

கும்ளம்:—வளவனூருக்கு வடகிழக்கில் சுமார் 5-மைல் தூரத்திலிருக்கிறது இதன் வீதிகள் மிகவும் விலாச மானவை இங்கு வன்னியர்களால் பூஜிக்கப்பெற்றுவரும் ஸ்ரீநிவாஸப்பெருமாள்சந்நிதி ஒன்று இருக்கிறது. அவர்கள் நடை, யுடை, பாவனைகளில் அநேகமாய் வைஷ்ணவரை ஒத்தவர்கள். ஜனத்தொகை. 1104.

முரட்டாண்டிச்சாவடி :— இது புதுச்சேரியிலிருந்து திண்டிவனம் போகும் பாதையிலிருக்கிறது. இங்கு இங்கி லீஷ்காரருடைய தீர்வைச்சாவடி ஒன்று இருக்கிறது.

கோட்டைக்குப்பம் :— இது புதுச்சேரிக்கு அடுத்த வடக்கேயுள்ளது. மகம்மதியர்கள் அதிகம். தென்னைமரங்கள் இங்கு விசேஷம். இங்கிலீஷ்காரருடைய தீர்வைச்சாவடி ஒன்று இங்கு இருக்கிறது. ஜனத்தொகை 6576.

பிரஞ்சு ராஜ்யம்.

நம்முடைய நாட்டில் பிரஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான இடம் பெரும்பாலும் இந்தத் தாலுகாவிலிருக்கிறது. அதன்விஸ்தீரணம் சுமார் 115-சதுரமைல். அதை ஒழுகரை, வில்லியனூர், பாகூர், அரியாங்குப்பம், திருபவனே, முதலியார்பேட்டை முதலிய அநேக கோமீன்(தாலுகாக்)களாகப் பிரித்திருக்கிறார்கள்.

வில்லியனூர் :— இதில் ஓர் பெரிய சிவன் கோவில் இருக்கிறது. இதில் விஜயநகரத்து அரசர் எழுதிய சில கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இதிலுள்ள (மிர்த்து லிங்கம்) ஸ்வயம்புவாய் ஏற்பட்டது. சுவாமியின்பெயர் திருக்காமேஸ்வரர்; அம்மன்பெயர் கோக்கிலாம்பாள். வைகாசி மாதத்தில் இதற்குப் பிர்ம்ம உற்சவம் நடந்துவருகிறது. இங்கு இருக்கும் மாதாகோவிலில் ஜூன் மாதம் உற்சவம் நடக்கும். அப்போது திரளான கிருஸ்தவர்கள் கூடுவார்கள். இந்தக் கொமியனில் ஊசிட்டேரி என்னும் ஓர் பெரிய ஏரி இருக்கிறது. இதன் நீர் 3-கொமியன்களுக்குப் பாய்கிறது. இதன் கரையில் ஓர் பெரிய பங்களா இருக்கிறது.

பாகூர் .— இது கூடலூர்த் தாலுகாவின் ஓரமாகக் கடற்கரையிலிருக்கிறது. இங்குச்சிவன்கோவிலொன்றுண்டு. அதில் சோழராஜராலும், ராஷ்டிரகூடராஜராலும் எழுதிய கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இதிலுள்ள ஏரி பெரியது பெண்ணையாற்றிலிருந்து இதற்கு ஓர் கால்வாய் வருகிறது. இங்குச்சுமார் 250-அடி ஆழத்திலிருந்து (பீட்) என்னும் ஓர் நிலக்கரி எடுத்துக் கெட்டிசெய்து பயன்படாததினால்விட்டுவிட்டார்கள்.

புதுச்சேரி.

நமது இந்தியாவிலுள்ள பிரஞ்சு ராஜ்யத்திற்குப் பிரதானபட்டணம் புதுச்சேரி. இது விழுப்புரத்திற்குக் கிழக்கே 25-மைல் தூரத்தில் கடற்கரையோரமாயுள்ள ஓர் துறைமுகம். 1674-ஆம் வருஷத்தில் பிராங்கோமார்ட்டின் என்னும் பிரெஞ்சு பிரபு, கிராமமாயிருந்த இதை, ஓர்சிற்றரசனிடமிருந்துவாங்கிக் கோட்டை முதலியவை கட்டினர். அப்பொழுது அந்தக் கிராமத்திலிருந்த பிள்ளையார்தான் இப்பொழுதும் அங்கு வெள்ளைக்காரர் வீதியிலிருக்கிறது. இதற்கு மணக்குளத்துப் பிள்ளையார் என்று பெயர் வழங்குகிறது.

இந்தப்பட்டணம், ஓர்வாய்க்காலால் இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. கீழ் பாகத்தில் கடலோரமாய் ஐரோப்பியரும் மேல்பாகத்தில் இந்துக்களும் வசிக்கிறார்கள். கடலில்சுமார் 150-கெஜம் வரையில் சாமான்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்காகக் கப்பற்றுறை வாராவதி (பியர்) கட்டப்பட்டிருக்கின்றது. இதன்மேல் மூட்டை வண்டிகளைத் தள்ளிக்கொண்டு போக இருப்புப்பாதைகளும் உண்டு. அவ்வாராவதியின் முகத்தில் செஞ்சி வேங்கடரமணஸ்வாமி கோயிலிலிருந்து கொண்டுவரப்பட்ட எட்டுக் கற்றூண்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இதற்குச் சற்று மேற்கில் செஞ்சியிலிருந்து கொண்டுவந்த ஐந்து கற்றூண்களின் பேரில் இந்தியாவில் பிரஞ்சு ராஜ்யத்தை நிலைநாட்டிய டியூப்ளே பிரபுவின் உருவம் வெண்கலத்தால் செய்து வைத்திருக்கிறது. அதற்கு இடதுபுறத்தில் ஓர் தீபஸ்தம்பமும் உண்டு. அதன் வலது புறத்தில்